**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 245/2023 P.W. 5/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சந்திரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.11.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். 19.04.2022 ம் தேதி மதியம் 01.30 மணி அளவில் மாதனாவிளையில் உள்ள ஸ்ரீமன் நாராயணசுவாமி கோவிலில் வைத்து போலீசார் வரைபடம் வரைந்தார்கள். பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார் . இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 19.04.2022 ம் தேதி 13.30 மணிக்கு குளச்சல் காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் கண்ணன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,,
இரணியல்

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No. 245/2023 P.W. 6/L.W.8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கண்ணன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.11.2023.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மெக்கானிக்காக வேலைச் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். 19.04.2022 ம் தேதி மதியம் 01.30 மணி அளவில் மாதனாவிளையில் உள்ள ஸ்ரீமன் நாராயணசுவாமி கோவிலில் வைத்து போலீசார் வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகசரில் 2 வதாக கையொப்பம் செய்தேன். **மேற்படி கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

அ.சா1 எனக்கு உறவினர் இல்லை, ஊர்காரர், கோவிலில் பணிவிடைச் செய்பவர். இது சம்மந்தமாக கையெழுத்திட சொல்லி யாரும் என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. நான் குளச்சல் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை.கோவிலில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். குளச்சல் காவல்நிலையத்திற்கு என்னுடன் 7, 8 பேர்கள் வந்தார்கள். குளச்சல் காவல்நிலையத்திற்கு உள்ளே வைத்து கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது. நான் படித்துப் பார்க்கவில்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,,
இரணியல்